# LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN 2278-2311


## பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது

சேலம்.

தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

4

பன்னாட்டுக் கருத்தரங்கம் அக்டோபர்-04-2019

# இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்



OCTOBER - 2019


visit us : www.kongunadupublications.com

kongunadupublications@gmail.com


Scanned with CamScanner

KONGUNADU PUBLICATIONS
INDIA PRIVATE LIMITED

ISSN : 2278-2311

22782311

Scanned with CamScan

# LFS

# LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN: 2278-2311

**VOL: 8** **OCTOBER - 2019** **ISSUE: 9**



## PUBLISHING EDITOR

**Nall Natarajan**

***Kongunadu Publications (India) Private Limited, Erode.***

kongunadupublications@gmail.com

## EDITOR

**Dr. B.Sankareswari**

*Madurai Kamaraj University, Madurai.*

sankaritamil@gmail.com

## EDITORIAL AND ADVISORY BOARD

**Dr.A.Govindarajan**
*Bharathidasan University, Tiruchirappalli.*
govindarajan.bdu@gmail.com

**Dr.C.Karthikeyan**
*Tamil Nadu Open University, Chennai.*
karthikeyan251973@gmail.com

**A.Mariya Sebasthiyan**
*VIT University, Velur.*
maryasepastin.a@vit.ac.in

**Dr. K.Paulin Preetha Jebaselvi**
*Bishop Heber College, Trichy.*
kpauline@bhu.edu.in

**Dr.T.K Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, C.Mutlur, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya, Malaysia,*
skumaran.um@gmail.com

## பதிப்பாசிரியர்

நல் நடராசன்

*கொங்குநாடு பப்ளிகேஷன்ஸ் (இந்தியா) பி.லிட், ஈரோடு.*

kongunadupublications@gmail.com

## ஆசிரியர்

முனைவர் பா.சங்கரேஸ்வரி

*மதுரை காமராசர்பல்கலைக்கழகம், மதுரை.*

sankaritamil@gmail.com

## ஆசிரியர் குழு

முனைவர் அ.கோவிந்தராஜன்
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,திருச்சிராப்பள்ளி.*
govindarajan.bdu@gmail.com

முனைவர் சி கார்த்திகேயன்
*தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
karthikeyan251973@gmail.com

அ.மரிய செபஸ்தியான்
*விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.*
maryasepastin.a@vit.ac.in

முனைவர் க.பாலின் பிரீதா ஜெபசெல்வி
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.*
kpauline@bhu.edu.in

முனைவர் தா.க.அனுராதா
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

முனைவர் பரமசிவம் முத்துசாமி
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

R.F.அரூஸ்
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*
raapa.arooz@gmail.com

முனைவர் க.காயத்ரி
*அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்.*
*gayathiripraba1981@gmail.com*

முனைவர் எஸ்.குமரன்
*மலாய் பல்கலைக்கழகம், மலேசியா*
*skumaran.um@gmail.com*


Scanned with CamScanner

**Dr.A.Palaniammal**
*Padmavani Arts & Science College for Women, Salem,*
palaniammaltamil@gmail.com

**Dr.L.R.Gopinath**
*Vivekanandha Educational Institutions, Namakkal,*
lrgopinathnamakkal@gmail.com

**Dr.S.Senthilkumar**
*Annamalai University, Annamalai nagar,*
dr.senthilkumarcdm@gmail.com

**Sellathurai Sutharsan**
*University of Peradeniya, sri Lanka,*
sellathuraisutharsan@gmail.com

**Dr.N.Sathya**
*Government College For Women, Kumbakonam,*
drsathiyatamil@gmail.com

**Balasundaram Elayathamby**
*Annamalai Canada Campus, Canada,*
Balasudarame@yahoo.com

**Dr.D.Umadevi**
*University of Delhi, Delhi,*
umadchitra@gmail.com.

**Dr.P.Senthilkumar**
*Periyar University, Dharmapuri,*
senthakil06@gmail.com.

**Dr.G.Ramesh**
*Thiruvalluvar University, Vellore,*
grameshtu@gmail.com.

**Dr.K.Kala**
*Former Joint Director of Collegiate Education, Trichy,*
*kkalasethu@gmail.com*

**Kongunadu Publications India Private Limited**
118, Mettur Road, Kalyan Silks Oppsite,
Erode – 638 011.
Ph: 0424 – 2251545, 94422 51549, 97919 51549, 63817 01339.
E-mail: kongunadupublications@gmail.com
Web: www.kongunadupublications.com

**முனைவர் அ.பழனியம்மாள்**
*பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்.*
palaniammaltamil@gmail.com

**முனைவர் எல்.ஆர்.கோபிநாத்**
*விவேகானந்த கல்வி நிறுவனங்கள், நாமக்கல்,*
lrgopinathnamakkal@gmail.com

**முனைவர் ச.செந்தில் குமரர்**
*அண்ணாமலைப்பல்கலைக்கழகம்,அண்ணாமலைநகர்*
dr.senthilkumarcdm@gmail.com

**செல்லத்துரை சுதர்சன்**
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை*
sellathuraisutharsan@gmail.com

**முனைவர் நா.சத்யா**
*அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்.*
drsathiyatamil@gmail.com

**பாலசுந்தரம் இளையதம்பி**
*அண்ணாமலை கனடா வளாகம், கனடா,*
Balasudarame@yahoo.com

**முனைவர் D.உமாதேவி**
*டெல்லி பல்கலைக்கழகம், டெல்லி,*
umadchitra@gmail.com.

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், தருமபுரி,*
senthakil06@gmail.com.

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com.

**முனைவர் க.கலா**
மேனாள் கல்லூரி கல்வி இணை இயக்குநர், திருச்சி,
kkalasethu@gmail.com

**கொங்குநாடு பப்ளிகேஷன் இந்தியா (பி) லிட்**
118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638 011.
அலைபேசி : 0424-2251545, 94422 51549, 97919 51549, 63817 01339.
மின்னஞ்சல்: kongunadupublications@gmail.com
இணையதளம்: www.kongunadupublications.com

படைப்பாளர்களின் கவனத்திற்கு ....

இதுவரை வெளியான, அனைத்து **LITERARY FINDINGS** இதழ்களையும் எங்களது **www. kongunadupublications.com** இணையதளத்தில், முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

அல்லது

**https:// literaryfindings.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையதளத்தின் வழியாக அனுப்பலாம்.

Scanned with CamScanner

# பொருளடக்கம்

## CONTENTS


1. இலக்கண, இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

*அ.முருகன் - 1

2. தொல்காப்பியர் சுட்டும் எண்வகை மெய்ப்பாடுகளும் வாழ்வியலும்

*முனைவர் அ.பழனியம்மாள் - 3

3. பொருநராற்றுப்படையில் பொருநரின் வாழ்வியல்

*திருமதி சு.ரேகா - 8

4. நற்றிணைக் காட்டும் களவியல் வாழ்க்கை

*முனைவர் மு.லோகநாயகி - 10

5. கானலம் பெருந்துறை மக்கள் வாழ்வியல்

*தெ.சந்திரா - 13

6. சங்க இலக்கியத்தில் நெல்வளம்

*முனைவர் ப.முருகேசன் - 16

7. தொல்காப்பியத்தில் பிள்ளைத்தமிழ் கூறுகள்

*ஆ.சசிகலா - 20

8. பெரியபுராணத்தில் வேளாண் சமுதாயம்

*திருமதி கோ.உமா - 23

9. கலித்தொகை காட்டும் வாழ்வியல் செய்திகள்

*முனைவர் அ.விஜயலட்சுமி - 26

10. குறள் காட்டும் இனிய இல்லறம்

*முனைவர் ஞா.சுஜிலின் ஞானஜெனி - 29

11. சங்ககால மக்களின் வாழ்வியல் கூறுகள்

*க.முனியதேவி - 32

12. ஐங்குறுநூற்றில் வாழ்வியல் கூறுகள்

*முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி - 34

13. கிறித்தவ நாவல்களில் வாழ்வியல் சடங்கு முறைகள்

*சே.சலோமி இராஜரீகம் - 38

14. தொல்காப்பியம் காட்டும் மக்கள் வாழ்க்கை

*பா.சுதா - 40

15. பெண்கவிஞர்களின் படைப்புத்திறன்

*முனைவர் த.லக்ஷ்மி - 43


Scanned with CamScanner

# ஐங்குறுநூற்றில் வாழ்வியல் கூறுகள்

*முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி, உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம் பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 018, பேசி: 9751488492 மின்னஞ்சல்: adonispeo@gmail.com.

**முன்னுரை**

இலக்கியம் வாழ்க்கையிலிருந்து மலர்கிறது. மக்கள், வாழ்க்கையில் கண்ட உண்மைகளையும் நுகர்ந்த நுகர்ச்சிகளையும் எண்ணிய எண்ணங்களையும் விரும்பிய விருப்பங்களையும் மொழிவழி எழுத்து வடிவத்தில் வடித்துக் காட்டுவதே இலக்கியம் ஆகும். தமிழர்தம் பெருமைகளையும் வாழ்வியல் ஒழுக்கங்களையும் பறைசாற்றக்கூடிய வரலாற்றுக் கருவூலங்களாகத் திகழ்பவை பாட்டும் தொகையுமாகிய சங்க இலக்கியங்கள் ஆகும். காலத்தால் மூத்த, கருத்தால் முதிர்ந்த இச்சங்க இலக்கியங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு மணிமுடியாகத் திகழ்கின்றன. இச்சங்க இலக்கியத் தொகை நூல்களுள் ஒன்றான ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் கூறுகளைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**ஐங்குறுநூறு**

அகவற்பாவில் அமைந்த அகப்பாடல் நூல் ஆகும். மூன்றடிச் சிற்றெல்லை முதல் ஆறடிப் பேரெல்லை வரையுள்ள பாடல்களை உடையது. நூறுநூறு பாக்களால் ஐந்திணை ஒழுக்கங்களைச் சிறப்பிக்கின்றது. மருதத்திணைப் பாடல்களை ஓரம்போகியாரும் நெய்தல் திணைப்பாடல்களை அம்மூவனாரும் குறிஞ்சித்திணைப் பாடல்களைக் கபிலரும் பாலைத்திணைப் பாடல்களை ஓதலாந்தையாரும் முல்லைத்திணைப் பாடல்களைப் பேயனாரும் பாடியுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னர். **(டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.38).** திணைகளின் வைப்பு முறையானது மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற முறையில் அமைந்துள்ளது. இந்நூல் அம்மை, அழகு என்னும் வனப்பினைப் பெற்றுள்ளது. இந்நூலுக்கு அமைந்த பழைய உரையை உ.வே. சாமிநாதையர் 1903ஆம் ஆண்டு நூல் வடிவில் பதிப்பித்துள்ளார்.

**வாழ்வியல் கூறுகள்**

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள காலம் வாழ்க்கை எனப்படும். இவ் வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் இயல் வாழ்வியல் ஆகும். இவ் வாழ்வியலானது மக்களின் பழக்க வழக்கம், நம்பிக்கை, ஆண் - பெண் உறவுநிலைகள், சமுதாய அமைப்பு, வாழ்க்கைப் போராட்டம், கல்வி, அரசியல், பொருளியல் போன்ற எண்ணற்ற கூறுகளை உள்ளடக்கியது. ஐங்குறுநூற்றிலுள்ள பாடல்கள் ஏராளமான வாழ்வியல் கூறுகளைக் கொண்டுள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள இவ் வாழ்வியல் கூறுகளைப் பழக்க வழக்கம் சார்ந்த வாழ்வியல் கூறுகள், பண்பாடு சார்ந்த வாழ்வியல் கூறுகள், நம்பிக்கை சார்ந்த வாழ்வியல் கூறுகள், உணர்வு சார்ந்த வாழ்வியல் கூறுகள் எனப் பாகுபடுத்திப் பார்ப்பதற்கு இடம் உண்டு.

**பழக்க வழக்கம் சார்ந்த வாழ்வியல்**

பழக்கம் என்ற சொல் 'பழுகுதல்' அல்லது 'பயிற்சியாதல்' என்ற பொருளில் தமிழ் இலக்கியத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. தனிமனிதனிடம் இயல்பாக அமைந்த நடத்தையைக் குறிப்பது பழக்கம். சமூகத்தில் அதிகமாகப் பின்பற்றப்படும் பழக்கமான நடவடிக்கையானது ஒழுக்கத்தாலும் செயலாலும் உருவாவது. மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன. பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கம் எனப்படுகின்றது. இவ்வழக்கம், சமூகம் சார்ந்த ஒன்றாகும். தனிமனிதனைச் சார்ந்த தொடக்க நிலையைப் பழக்கம் எனவும் சமுதாயம் சார்ந்த தொடக்கநிலையை வழக்கம் எனவும் கூறலாம். தனிமனிதன் ஒருவன் பழகிப்போன முறையில், திரும்பத் திரும்பச் செய்துவரும் ஒரு குறிப்பிட்ட செயலை, மனிதர் பலர் ஒன்றாகச் சேர்ந்து செய்கின்றபோது அது வழக்கம் எனப் போற்றப்படுகிறது என்கிறார் க.த. திருநாவுக்கரசு **(வள்ளுவர் கண்ட மனிதன், Journal of Tamil Studies,** ப.80). சங்ககாலத் தமிழர்களிடம் சிலம்புகழி நோன்பு, திருமணம், விளையாட்டுக்கள், தழைஆடை, அணிகலன்கள், தொழில், பண்டமாற்று போன்ற பழக்க வழக்கம் சார்ந்த வாழ்வியல் கூறுகள் இருந்ததை ஐங்குறுநூறு பதிவு செய்கின்றது.



Scanned with CamScanner